## 5. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

69. சென்னை—25, கிண்டியிலுள்ள பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் கல்விக் கழகம் தனது அலுவல்களைத் தொடங்கும் தேதி குறித்து கல்வித் துறையின் 1–4–1980 ஆம் தேதியிடப் பெற்ற 616 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1978) 43(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

70. சென்னை, மணலியிலுள்ள இந்தியன் ஆர்க்கானிக் கெமிகல் நிறுவனத்தில் தயாரிக்கப் பெறும் செயற்கை இழை விற்பனையின் மீது செலுத்தத் தக்க விற்பனை வரியை நான்கு சதவிகிதத்திலிருந்து இரண்டு சதவிகிதமாகக் குறைப்பது குறித்து, வணிக வரிகள், சமய அறக்கட்டளைகள் துறையின் 3–5–1980 ஆம் தேதியிடப் பெற்ற 421 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

71. வருவாய்த் துறையில் 26—4—1971 ஆம் தேதியன்று வெளியாகி, 12—5—1971 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பக்கம் 588-ல் (ஆங்கிலத்தில்) வெளியான III, 91 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30—11—1979 ஆம் தேதியிடப் பெற்ற 1971 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவும் இல்லை.